உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்கப்பிள்ளையவர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

# மகாதேவமாலை.

இஃது

சிதம்பரம்

அய்யாதுரைபிள்ளை கேட்டுக்கொண்டபடி

விவேகவிளக்கவச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சுபானு வரு.

உ

திருச்சிற்றம்பலம்.

## ௨ ஞானதேசிகமாலை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கருணைநிறைந்தகம்புறமுந்துளும்பிவழிந் துயிர்க்கெல்லாங்களைகணாகித், தெருணிறைந்தவின்பநிலை வளர்க்கின்றகண்ணுடையோய்சிதையாஞானப், பொருணிறைந்தமறையமுதம்பொழிகின்ற மலர்வாயோய்பொய்யனேன்றன், மருணிறைந்தமனக்கருங்கற்பாறையுமுட்கசிந்துருக்கும்வடிவத்தோயே,

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

உலகநிலைமுழுதாகி யாங்காங்குள்ளவுயிராகி யுயிர்க்குயிராமொளிதானாகிக், கலகநிலையறியாதகாட்சியாகிக்கதி

யாகிமெய்ஞ்ஞானக்கண்ணதாகி, யிலகுசிதாகாசமதாய்ப்
பரமாகாச வியல்பாகியிணையொன்றுமில்லாதாகி,யலகில
றிவானந்தமாகிச்சச்சிதானந்தமயமாகியமர்ந்ததேவே. (௧)

உலகமெலாந்ததும்பிநிறைந்தவுண்மையாகி யோகியர்த
மநுபவத்திநுவப்பாயென்றுங்,கலகமுறுருவுபசாந்தநிலைய
தாகிக் களங்கமற்றவருண்ஞானக்காட்சியாகி, விலகலுரு
நிபிடவானந்தமாகிமீதானத்தொளிர்கின்றவிளக்கமாகி,யி
லகுபராபரமாய்ச்சிற்பரமாயன்பரிதயமலர்மீதிருந்தவின்
பத்தேவே. (௨)

விந்தாகிமுளையாகிவிளைவதாகி விளைவிக்கும்பொரு
ளாகிமேலுமாகிக், கொத்தாகிப்பயனாகிக்கொள்வோனாகி
க்குறைவாகிநிறைவாகிக்குறைவிலாத, சத்தாகிச்சித்தாகி
யின்பமாகிச் சதாநிலையாயெவ்வுயிர்க்குஞ்சாட்சியாகி, மு
த்தாகிமாணிக்கமாகித்தெய்வ முழுவயிரத்தனிமணியாய்
முளைத்ததேவே (௩)

வேதாந்தநிலையாகிச்சித்தாந்தத்தின் மெய்யாகிச்சமர
சத்தின்விவேகமாகி, நாதாந்தவெளியாகிமுத்தாந்தத்தின
டுவாகிநவநிலைக்குநண்ணுதாகி, பூதாண்டகோடியெல்லா
ந்தாங்கிநின்ற முதலாகிமறைநிதமுந்தியாகி, வாதாண்டச
மயநெறிக்கமையாதென்று மௌனவியோமத்தினிடைவ
யங்குந்தேவே. (௪)

தோன்றுதுவிதாத்துவிதமாய் விசிட்டாத்துவிதமாய்க்கேவலாத்துவிதமாகிச், சான்றசுத்தாத்துவிதமாய்ச்சுத்தந்தோய்ந்தசமரசாத்துவிதமுமாய்த்தன்னையன்றி, யூன்றுநிலைவேறொன்றுமிலதாயென்றுமுள்ளதாய்நிறிசயவுணர்வாயெல்லாமீன்றருளுந்தாயாகித்தந்தையாகி எழிற்குருவாய்த்தெய்வதமாயிலங்குந்தேவே. (௫)

பரமாகிச்சூக்குமமாய்த்தூலமாகிப் பரமார்த்தநிலையாகிப்பதத்தின்மேலாஞ், சிரமாகித்திருவருளாம் வெளியாயான்மசிற்சத்தியாய்ப்பரையின்செம்மையாகித்திரமாகித்தற்போதநிவர்த்தியாகிச் சிவமாகிச்சிவாநுபவச்செல்வமாகி, யரமாகியானந்தபோதமாகியானந்தாதீதமதாயமர்ந்ததேவே. (௬)

இந்தியமாய்க்கரணநியனந்தமாகியியல்புருடனாய்க்காலபரமுமாகிப், "பந்தமற்றவியோமமாய்ப்பரமாயப்பாற்பரம்பரமாய்விசுவமுண்டபான்மையாகி, வந்தவுபசாந்தமதாய்மௌனமாகி மகாமௌனநிலையாகிவயங்காநின்ற வந்தமிறொம்பதமாய்த்தற்பதமாயொன்று மசிபதமாயதீதமாயமர்ந்ததேவே. (௭)

நின்மயமாயென்மயமாயொன்றுங்காட்டா நிராமயமாய்நிருவிகற்பநிலையாய்மேலாந், தன்மயமாய்த்தற்பரமாய்விமலமாகித்தடத்தமாய்ச்சொரூபமாய்ச்சகசமாகிச், சி

ன்மயுமாய்ச்சிற்பரமாயசலமாகிச் சிற்சொலிதமாயகண்ட சிவமாயெங்கு,மன்மயமாய்வாசகாதீதமாகிமனாதீதமாயமா ர்ந்தமௌனத்தேவே. (அ)

அளவிறந்தநெடுங்காலஞ்சித்தர்யோக ரறிஞர்மலரய ன்முதலோரனந்தவேதங், களவிறந்துங்கரணாதி யிறந்து ஞ்செய்யுங் கடுந்தவத்துங்காண்பரிதாகடவுளாகி,யுளவிற ந்தவெம்போல்வாருள்ளத்துள்ளே யூறுகின்றதெள்ளமு தவூறலாகிப், பிளவிறந்துபிண்டாண்டமுழுதுந்தானாய்ப் பிறங்குகின்றபெருங்கருணைப்பெரியதேவே, (கூ)

வாயாகிவாயிறந்தமௌனமாகி மதமாகிமதங்கடந்த வாய்மையாகிக், காயாகிப்பழமாகித்தருவாய்மற்றைக்கரு விகரணாதிகளின்கலப்பாய்பெற்ற, தாயாகித்தந்தையாய்ப் பிள்ளையாகித் தானாகிநானாகிச்சகலமாகி, யோயாதசத்தி யெலாமுடையதாகி யொன்றாகிப்பலவாகி யோங்குந்தே வே, (ய)

அண்டங்கள்பலவாகி யவற்றின்மேலுமளவாகி யள வாதவதீதமாகிப், பிண்டங்களனந்தவகையாகிப்பிண்டம் பிறங்குகின்றபொருளாகிப்பேதந்தோற்றும், பண்டங்கள் பலவாகியிவற்றைக்காக்கும்பதியாகியானந்தம் பழுத்துச் சாத்தங், கொண்டெங்குநிறல்பரப்பித் தழைத்தஞானக் கொழுங்கடவுட்டருவாகிக்குலவுந்தேவே, (யக)

பொன்னாகிமணியாகிப்போகமாகிப்புறமாகியகமாகி
ப்புனிதமாகி, மண்ணாகிமலையாகிக்கடலுமாகிமதியாகிரவி
யாகிமற்றுமாகி, முன்னாகிப்பின்னாகிநடுவுமாகிமுழுதாகி
நாதமுறமுழங்கியெங்கும், மின்னாகிப்பரவியின்பவெள்ளந்
தேக்க வியன்கருணைப்பொழிமுகிலாய்விளங்குந்தேவே.

அரிதாகியரியதினுமரியதாகியநாதியாயருளதாகிப்
பெரிதாகிப்பெரியதினும்பெரியதாகிப் பேதமாயபேதமா
ய்ப்பிறங்காநின்ற கரிதாகிவெளிதாகிக்கலைகளாகிக்கலைகட
ந்தபொருளாகிக்காரணாதீதத், தெரிதாளவெளிநடுவி லரு
ளாம்வண்மைச்செழுங்கிரணச் சுடராகித்திகழுந்தேவே

உருவாகியுருவினிலுள்ளருவமாகி யுருவத்திலுரு
வாகியுருவுள்ளொன்று, யருவாகியருவினிலுள்ளருவமாகி
யருவத்திலருவாகியருவுள்ளொன்றாய்க், குருவாகிச்சத்து
வசிற்குணத்ததாகிக் குணாதீதப்பொருளாகிக்குலவாநின்
ற மருவாகிமலராகிவல்லியாகிமகத்துவமாயணுத்துவமா
ய்வயங்குந்தேவே, (௧௪)

சகலமாய்க்கேவலமாய்ச்சுத்தமாகிச்சராசரமாயல்ல
வாய்த்தானேதானா, யகலமாய்க்குறுக்கமாய் நெடுமையா
கியவையனைத்துமணுகாதவசலமாகி, யிகலுறாத்துணையா
கித்தனியதாகியெண்குணமாயெண்குணத்தெம்மிறையா
யென்று, முகல்லாத்தண்ணருள்கொண் டுயிரையெல்லா
மூட்டிவளர்த்திடுங்கருணையோவாத்தேவே. (௧௫)

வாசகமாய்வாச்சியமாய்நடுவாயந்த வாசகவாச்சியங் கடந்தமௌனமாகித், தேசகமாயிருளகமாயிரண்டுங்காட் டச்சித்தகமாய்வித்தகமாய்ச்சிறிதும்பந்த,பாசமுருப்பதி யாகிப்பசுவுமாகிப்பாசமிலையாகியொன்றும்பகராதாகி, நா சமிலாவெளியாகியொளிதானுகிநாதாந்தமுடிவினட நவி ற்றுந்தேவே. (கசு)

சகமாகிச்சீவனுயீசனுகிச் சதுமுகனுய்த்திருமாலா யரன்ருனுகி, மகமாயைமுதலாய்க்கூடத்தனுகி வான்பிர மமாகியல்லாவழக்குமாகி, யிகமாகிப்பரமாகிச் சமயகோ டி யெத்தனையுமாகியவையெட்டாவான்கற், பகமாகிப்பர மாகிப்பரமமாகிப்பராபரமாய்ப்பரம்பரமாய்ப்பதியுந்தே வே. (கஎ)

விதியாகியரியாகிக்கிரீசனுகி விளங்குமகேச்சுரனுகி விமலமான, நிதியாகுஞ்சதாசிவனுய்விந்துவாகிநிசழ்நாத மாய்ப்பரையாய்நிமலானந்தப், பதியாகும்பரசிவமாய்ப்ப ரமாய்மேலாய்ப்பக்கமிரண்டாயிரண்டும்பகராதாகிக், கதி யாகியளவிறந்தகதிகளெல்லாங் கடந்துநின்றுநிறைந்தபெ ருங்கருணைத்தேவே, (கஅ)

மானுகிமோகினியாய்விந்துவாகிமற்றவையாற்கானு தவானமாகி, நானுகிநானல்லனுகிநானே நானும்பதமா கிநான்ருன் கண்ட, தானுகித்தானல்லனுகித்தானேதானு

கும்பதமாகிச்சகசஞான, வானுகிவானடுவில் வயங்குகின்றமௌனநிலையாகியெங்கும்வளருந்தேவே. (கக)

மந்திரமாய்ப்பதமாகிவன்னமாகி வளர்கலையாய்த்தத்துவமாய்ப்புவனமாகிச், சந்திரனுயிந்திரனு யிரவியாகித்தானவராய்வானவராய்த்தயங்காநின்ற, தந்திரமாயிவையொன்றுமல்லவாகித்தானுகித்தனதாகித்தானுன்காட்டாவந்தரமாயப்பாலாயதற்கப்பாலாயப்பாலுக்கப்பாலாயமர்ந்ததேவே. (உ0)

மலைமேலுங்கடன்மேலுமலரின்மேலும் வாழ்கின்றமூவுருவின்வயங்குங்கோவே, நிலைமேலுநெறிமேலுநிறுத்துகின்றநெடுந்தவத்தோர்நிறைமேலுநிகழ்த்தும்வேதக், கலைமேலுமெம்போல்வாருளத்தின்மேலுங் கண்மேலுந்தோண்மேலுங்கருத்தின்மேலுந், தலைமேலுமுயிர்மேலுமுணர்வின்மேலுந் தருமன்பின்மேலும்வளர்தாண்மெய்த்தேவே. (உக)

பொற்குன்றேயகம்புறமும்பொலிந்துநின்ற பூரணமேயாரணத்துட்பொருளேயென்றுங், கற்கின்றோ கினியசுவைக்கரும்பேதான கற்பகமேகற்பகத்தீங் கனியேவாய்மைச், சொற்குன்றுநாவகத்துண்மாருவின்பந்தோற்றுகின்றதிருவருட்சீர்ச்சோதியேவிண், ணிற்கின்றசுடரோய்ச்சுடருள்ளோங்கு நீளொளியேயவ்வொளிக்குணிறைந்த தேவே, (உஉ

தேசுவிரித்திருளகற்றியென்றுமோங்கித் திகழ்கின்
றசெழுங்கதிரோசெறிந்தவாழ்க்கை, மாசுவிரித்திடுமனத்
திற்பயிலாத்தெய்வ மணிவிளக்கேயானந்தவாழ்வேயெங்
கும், காசுவிரித்திடுமொளிபோற்கலந்துநின்ற காரணமே
சாந்தமெனக்கருதாநின்ற, தூசுவிரித்துடுக்கின்றோர் தம்
மைநீங்காச் சுகமயமேயருட்கருணைதுலங்குந்தேவே ( )

கோவேயெண்குணக்குன்றேகுன்றுஞானக் கொழு
ந்தேனேசெழும்பாகேகுளிர்ந்தமோனக், காவேமெய்யறி
வின்பமயமேயென்றன் கண்ணேமுக்கண்கொண்டகரும்
பேவானத், தேவேயத்தேவுக்குந்தெளியவொண்ணத் தெ
ய்வமேவாடாமற்றிகழ்சிற்போதப். பூவேயப்பூவிறுறும
ணமேயெங்கும் பூரணமாய்நிறைந்தருளும் புனிதத்தே
வே. (உச)

வானேயவ்வானுலவுங்காற்றேகாற்றின் வருநெருப்
பேநெருப்புநீர்வருவேநீரிற், றூனேயம்புவியேயப்புவியி
ற்றங்கும் தாபரமேசங்கமமேசாற்றுகின்ற, ஆனேநல்லுயி
ரேயுள்ளொளியேயுள்ளத் துணர்வேயவ்வுணர்வுகலந்தூ
றுகின்ற, தேனேமுக்கனியேசெங்கரும்பேபாகின் றீஞ்சு
வையேசுவையனைத்துந்திரண்டதேவே. (உரு)

விண்ணேவிண்ணுருவே விண்முதலேவிண்ணுள்
வெளியேயவ்வெளிவிளங்குவெளியேயென்றன், கண்ணே
கண்மணியே கண்ணொளியேகண்ணுட் கலந்துநின்றகதி

ரேயக்கதிரின்வித்தே, தண்ணேதண்மதியேயடம்மதிப்
த்ததண்ணமுதேதண்ணமுதசாரமேசொற், பண்ணே
ண்ணிசையேபண்மயமேபண்ணின் பயனேமெய்த்
வாழ்த்திப்பரவுந்தேவே. (௬

மாணயத்தவருளத்தேமலர்ந்த செந்தாமரைய
ல்வயங்குகின்றமணியேஞானப், பூணேமெய்ப்பொரு
யற்புதமேமோனப்புத்தமுதேயானந்தம்பொலிந்தமெ
பே, யானேபெண்ணுருவமேயலியேயொன்று மல்
பேரொளியேயனைத்துந்தாங்கும், ஆனேசிற்சுகமேய
கமேற்பொங்குஞ் சொரூபானந்தக்கடலே சோதித்
வே. (

பூதமேயவைதோன்றிப்புகுந்தொடுக்கும்புகலிட
யிடம்புரிந்தபொருளேபோற்றும், வேதமேவேதத்
விளைவேவேத வியன்முடியேயம்முடியின் விளங்கு
வே, நாதமேநாதாந்தநடமேயந்த நடத்தினையுண்ண
துகின்றநலமேஞான, போதமேபோதமெலாங்கடந்து
ற பூரணமேயாகியருட்பொலிந்ததேவே. (௨

ஞாலமேஞாலமெலாம்விளங்கவைத்த நாயகமே
பமுதனைவிலாநின்ற, காலமேகாலமெலாங்கடந்தஞான
தியேமெய்க்கதியளிக்குங்கடவுளேசிற்;கோலமேகுண

யுட்குறியேகோலங் குணங்குறிகள்கடந்துநின்றகுருவேய
ன்பர், சிலமேமாலறியாமனத்திற்கண்டசெம்பொருளேயு
ம்பர்பதஞ்செழிக்குந்தேதவ. (௨௯)

தத்துவமேதத்துவாதீதமேசிற் சயம்புவேயெங்குநி
றைசாட்சியேமெய்ச், சத்துவமேசத்துவத்தின்பயனேயின்
பந் தந்தருளும்பெருவாழ்வாஞ்சாமியேயென், சித்தநிலை
தெளிவிக்குமொளியேசற் றுந் தெவிட்டாததெள்ளமுதே
தேனேயென் றுஞ், சுத்தநெறிநிறம்பாதாரதிவிற்றோய்ந்த
சுகப்பொருளேமெய்ஞ்ஞானந்துலங்குந்தேவே. (௩௰)

யோகமேயோகத்தின்பயனேயோகத்தொருமுதலே
யோகத்தினோங்குந்தூய போகமேபோகத்தின்பொலிவே
போகம் புரிந்தருளும்புண்ணியமேபுனிதஞான, யாகமே
யாகத்தின்விளைவேயாகந் திறையேயவ்விறைபுரியு மின்
பேயன்பர், மோகமேமோகமெலாமழித்துவீறு மோன
மேமோனத்தின்முளைத்ததேவே. (௩௧)

காட்சியேகாண்பதுவேஞேயமே யுட் கண்ணுடையா
ர் கண்ணிறைந்தகளிப்பேயோங்கு, மாட்சியேயுண்மைய
றிவின்பமென்னவயங்குநின்றவாழ்வேமாமௌனக்காணி
யாட்சியேயாட்சிசெயுமாசேசுக்கவறிவேமெய்யன்பதெள்
ளமுதேநல்ல, * சூட்சியேசூட்சியெலாங்கடந்துநின்றதுரி
யமேதுரியமுடிச்சோதித்தேவே. (௩௨)

* எதுகை நயம் பற்றி நின்றது.

மறைமுடிக்குப்பொருத்தமுறுமணியேஞா
தியேயன்பர்நடம்மனத்தேநின்ற, குறைமுடிக்குங்
குன்றேகுன்றுமோனக்கோமளமேதூயசிவக்கொ
வெள்ளைப், பிறைமுடிக்கும்பெருமானே துளவவ
பெம்மானேசெங்கமலப்பிரானேயிந்த, விறைமுடி
வர்கட்குமேலாய்நின்ற விறையேயிவ்வுருவுமின்றி
தேவே.

கோதகன்றயோகர்மனக்குகையில்வாழுங் கு
ண்முகங்கொண்டகோவேவஞ்ச, வாதகன்றஞானிய
தில்லூறும்வானமுதேயானந்தமழையேமாயை,
ன்றழுத்தர்களைவிழுங்குஞான வேழமேமெய்யின்
ந்தெநெஞ்சிற், றீதகன்றமெய்யடியார்தமக்குவாய்த்த
வமேயெல்லையிலாச்சீர்மைத்தேவே.

அருளருவிவழிந்துவழிந்தொழுகவோங்கு ம
த்தனிமலையேயமலவேதப், பொருளளவுநிறைந்தவ
மேலுமோங்கிப் பொலிகின்றபரம்பொருளேபுரல
யிருளறுசிற்பிரகாசமயமாஞ்சுத்த வேதாந்தப்பெ
ளிக்குளிருந்தவாழ்வே, தெருளளவுமுளமுழுதுங்
கொண்டு தித்திக்குஞ்செழுந்தேனேதேவதேவே.

அளவையெலாங்கடந்துமனங்கடந்துமற்றைய
யெலாங்கடந்துகடந்தமலயோக, குளவையெலாங்

பதங்கடந்துமேலையொன்று கடந்திரண்டுகடந்துணரச்சூழ்ந்த, களவையெலாங்கடந்தண்டபிண்டமெல்லாங் கடந்துநிறைவானசுகக்கடலேயென்பர், வளவையெலாமிருளகற்றுமொளியேமோனவாழ்வேயென்னுயிர்க்குயிராய் வதியுந்தேவே.

(௩௬)

வன்புகலந்தறியாதமனத்தோர் தங்கண்மனங்கலந்து மதிகலந்துவயங்காநின்ற, வென்புகலந்தான்கலந்துபுலன்களோடுமிந்திரியமவைகலந்துள்ளியங்குகின்ற, வன்புகலந்தறிவுகலந்துயிரைம்பூதமான்மாவுங்கலந்துகலந்தண்ணித்தூறி, யின்புகலந்தருள்கலந்து துளும்பிப்பொங்கியெழுங்கருணைப்பெருக்காறேயின்பத்தேவே. (௩௭)

தண்ணமுதமதிகுளிர்ந்தகிரணம்வீசத் தடம்பொழிற்பூமணம்வீசத்தென்றல்வீச, வெண்ணமுதப்பளிக்குநிலாமுற்றத்தேழன்னிசைவீசத்தண்பனிநீரெடுத்துவீசப்பெண்ணமுதமனையவர்விண்ணமுதமூட்டப்பெறுகின்றசுகமனைத்தும்பிற்பட்டோடக், கண்ணமுதத்துடம்புயிர்மற்றனைத்துமின்பங் கலந்துகொளத்தருங்கருணைக் கடவுட்டேவே,

(௩௮)

அழியாதவருட்கருணைப்பெருக்கேயென்றுந் தூண்டாதமணிவிளக்கின்சோதியேவா,னொழியாதகதிர்பரப்புஞ்சுடரேயென்பர்க் கோவாதவின்பருளு மொன்றேவின்

ஞோர், விழியாலுமொழியாலுமனத்தினாலும் விள
மெய்த்தவத்தாலும்விளம்புமெந்த,வழியாலுங்கண்
ளற்கரிதாய்ச்சுத்த மௌனவொளியூழ் குந்தவையம்
தேவே.

சொல்லொழியப்பொருளொழியக் காணமென்
சோர்ந்தொழியவுணர்வொழியத்தானங்கின்ற, வ
ழியப்பகலொழியநடுவேநின்ற வானந்தவனுபவமே
வாழ்வே, நெல்லொழியப்பதர்கொள்வார்போலவின்
றைவொழியக்குறைகொண்மதநெறியோர்நெஞ்சக்,
லொழியமெய்யடியரிதயவெல்லாங் கலந்துகலந்தினி
றகருணைத்தேவே.

( )

அலைகடலும்புவியனையுமனல்கானீரு மந்தர
றையகிலாண்டம்யாவு,நிலைகுலையாவண்ணமருள்வெ
ளாதி நிரைநிரையாநிருத்தியுயிர்நிகழும்வண்ணங், க
லையாத்தத்துவஞ்செய்திரோதையென்னுங்கனியாலை
த்தியகூட்டலத்திலென்று மலைவறவீற்றிருக்குருகு
சேமுத்தி வழித்துணையேவிழித்துணையுண்மணியா
தேவே,

( )

வரம்பழுத்தநெறியேமெய்ந்நெறியிலின்பவௌம
த்தபெருவாழ்வேவானோர் தங்கள், சிரம்பழுத்தபதப்
ருளேயறிவானந்த சிவம்பழுத்தவனுபவமேசிதாகாச

ற், பரம்பழுத்தநடத்தரசேகருணையென்னும் பழம்பழு த்தவான்றருவேபரமஞானத், திரம்பழுத்தயோகியர்தம் யோகத்துள்ளே தினம்பழுத்துக்கனிந்தவருட் செல்வத் தேவே.

(சஉ)

அண்டமெலாங்கண் ணுகக்கொளினுங்காண்டற் க ணுத்துணையுங்கூடாவென் றனந்தவேதம், விண்டலறி யோலமிட்டுப்புலம்பமோன வெளிக்குள்வெளியாய்நிறை ந்துவிளங்குமொன்றே, கண்டவடிவாயகண்டமயமாயெங் குங் கலந்துநின்றபெருங்கருணைக்கடவுளேயெஞ் சண்ட விணைத்தொடக்கறச்சின்மயத்தைக்காட்டுஞ் சற்குருவேசி வகுருவேசாந்தத்தேவே

(சங)

பேதமுறுமெய்ப்போதவடிவமாகிப் பெருங்கருணை நிறம்பழுத்துச்சாந்தம்பொங்கிச், சீதமிகுந்தருள்கனிந்து கனிந்துமாறுச்சின்மயமாய்நின்மலமேமணந்துநீங்கா, வா தரவோடியன்மௌனச்சுவைமேன்மேற்கொண் டானந்த ரசமொழுக்கியன்பாலென்றுஞ், சேதமுறாதறிஞருளந்தி த்தித்தோங்குஞ் செழும்புனிதக்கொழுங்கனியே தேவ தேவே.

(சச)

உடல்குளிரவுயிர்தழைக்கவுணர்ச்சியோங்க வுளங்க னியமெய்யன்பருள்ளத்தூடே, கடலனையபேரின்பந்துளு ம்பநாளுங் கருணைமலர்த்தேன்பொழியுங்கடவுட்காவே,

விடலரியவெம்போல்வாரிதயந்தோறும் வேதாந்தமரு
துளிக்கும்விருந்தேவேதம், தொடலரியவெளிமுழுதும்
ரவிஞானச் சோதிவிரித்தொளிர்கின்றசோதித்தேவே.

இரிணையநெறியகற்றிமறை முடிவினின்றுசேனாம
கேட்கின்றகேள்வியேசொற், கரியவறைவிடுத்துநவிலே
ருமேமேல காணுமற்காண்கின்றகாட்சியேயுள், ஏரியமே
யொன்றிரண்டெனுவேசற்றுமறியாமலறிகின்ற வறிவே
ன்று, முரியசதாநிலைநின்றவுணர்ச்சிமேமேலாருண்ணும
ன்னுகின்றவொளியாந்தேவே. (௬௪

சொற்போதற்கரும்பெரியமறைகளுடித் தொடர்ந்
தொடர்ந்துயர்ந்தினோக்குக்குளங்கியேங்கப், பிற்போத
னைக்குன்பருளத்தேசென்ற பெருங்கருணைப் பெருவா
வேபெயராதென்றும், தற்போதவொழிவினிடை நிறை
துபொங்கித்ததும்பிவழிந்தோங்கியெல்லாந்தானேயாகி
நிற்போதத்துகம்புறமுங்கோத்துநின்ற சிவானந்தப்பெ
க்கேமெய்ச்செல்வத்தேவே, (௬௫

பொங்குபவசாமபெருந்திகளெல்லாம்புகுந்துக
டிடிறைசாயப்பொங்கியோங்கும், கங்குகரைகாணுக
வெல்லுங் கண்ணுக்கண்கின்றைநியேபான்பர், தங்க
முன்பார்ப்பயப்பசாடையெல்லாந் தணிக்கின்றதருவே
ந்தடமேஞானச், செங்குமுதமலர்வருமதியேயெல்லா
செய்யவல்லவுடனேதேவே. (௬

வான்காணாமறைகாணா மலரோன்காணான் மால்காணா
னுருத்திரனு மதித்துக்காணா, னான்காணா விடத்ததனைக்
காண்பேமென்றுநல்லோர்கணவில்கின்றநலமேவேட்கை,
மான்காணாவுளக்கமலமலர்த்தாநின்ற வான்சுடரேயானந்
தமயமேயீன்ற,வான்காணாவிளங்கன்றாயமலந்தேங்குமன்
பர்தமைக்கலந்துகொளுமமலத்தேவே. (௪௯)

மெய்ஞ்ஞானவிருப்பத்திலேறிக்கேள்விமீதேறித்தெளி
ந்திச்சைவிடுதலேறி, யஞ்ஞானமற்றபடியேறியுண்மை ய
றிந்தபடிநிலையேறியதுநானென்னுங், கைஞ்ஞானங்கழன்
றேறிமற்றவெல்லாங் கடந்தேறிமௌனவியற்கதியிலேறி
யெஞ்ஞானமறத்தெளிந்தோர் கண்டுங்காணேமென்கின்
றவநுபவமேயின்பத்தேவே. (௫௰)

பற்றியாமுத்தர்தமையெல்லாம்வாழைப்பழம்போலவி
ழுங்குகின்றபரமேமாசு,பெற்றறியாப்பெரும்பதமேபதத்
தைக்காட்டும்பெருமானேயானந்தப்பேற்றின்வாழ்வே, யு
ற்றறியாதின்னுமின்னுமறைகளெல்லா மோலமிட்டுத்தே
டநின்றவொன்றேயொன்றுங், கற்றறியாப்பேதையேன்ற
னக்குமின்பங்களித்தவருட்கடலே கருணைத்தேவே

மெய்யுணர்ந்தவாதவூர்மலையைச்சுத்தவெளியாக்கிக்கல
ந்துகொண்டவெளியேமுற்றும், பொய்யுணர்ந்தவெனை
ப்போல்வார்தமக்குமின்பம் புரிந்தருளுங்கருணைவெள்ள
ப்பொற்பே யன்பர், கையுறைந்துவளர்நெல்லிக் கனியேயு

ள்ளங் கரைந்துகரைந்துருகவவர்கருத்தினூடே, யுய்யுமெ
றியொளிகாட்டிவெளியுமுள்ளு மோங்குகின்றசுயஞ்சுட
ரேயுண்மைத்தேவே. (௫௨)

ஒலிவடிவுநிறைஞ்சுவைகளூற்றமூற்ற முறுதொழில்கள்
பயன்பலவேறுளவாயெங்கு, மலிவனையா யெவ்வகையு
மொன்றுமொன்று மாட்டாதாயெல்லாமும் வல்லதாகிச்,
சலிவகையில்லாதமுதற்பொருளேயெல்லாந் தன்மயமாய்
விளங்குகின்றதனியேயாண்பெண், ணலிவகைபல்லவாதவ
கைகடந்துநின்றவருட்சிவமேசிவபோகத்தமைந்ததேவே

பேராயவண்டங்கள்பலவும்பிண்டபேதங்கள் பற்பலவு
ம்பிண்டாண்டத்தின், வாராயபலபொருளுங் கடலுமண்
ணுமலையுளவுங்களவுமனலும்வானும், மூராதவான்மீனும
ணுவுமற்றை யுள்ளனவுமளந்திடலாமோகோவன்னே, யா
ராலுமளப்பரிதென்றனந்தவேத மறைந்திளைக்குநிதா
மாகுந்தேவே. (௫௪

கற்பங்கள்பலகோடிசெல்லத்தியகனவினடுனூசியின் மே
ற்காலூன்றிப், பொற்பறமெய்யுணர்வின்றிவுறக்கமின்றி
ப் புலர்ந்தெலும்புபுலப்படவைம்பொறியையோம்பி, நிற்
பவருக்கொளித்துமறைக்கொளித்தியோகர்நெஞ்சமுனிவர்க்
கொளித்தமரர்க்கொளித்துமேலாஞ், சிற்பதத்திற்சின்மய
மாய்நிறைந்துஞானத் திருவாளருட்கலந்ததேவதேவே, (

மட்டகன்றநெடுங்காலமனத்தால்வாக்கான்மதித்திடினும்புலம்பிடினும்வாராதென்றே, கட்டகன்றமெய்யறிவோர்கரணநீக்கிக் கலையகற்றிக்கருவியெலாங்கழற்றிமாயை,விட்டகன்றுகருமமலபோதம்யாவும்விடுத்தொழித்துச்சகசமலவீக்கநீக்கிச், சுட்டகன்றுநிற்கவவர்தம்மைமுற்றுஞ்சூழ்ந்துகலந்திடுஞ்சிவமேதுரியத்தேவே (௩௬)

உருநான்குமருநான்குநடுவேநின்றவுருவருவமொன்றுமிவையுடன்மேலுற்ற, வொருநான்குமிவைகடந்தவொன்றுமாயவ்வொன்றிநடுவாய்நடுவுள்ளொன்றாய்நின்றே, யிருநான்குமமைந்தவரைநான்கிேனாடு மெண்ணான்கின்மேலிருந்துமிறையேமாயைக், கருநான்கும்பொருணான்குங்காட்டுமுக்கட்கடவுளேகடவுளர்கள்கருதுந்தேவே, (௩௭)

பாங்குளநாந்தெரிதுமெனத்துணிந்துகோடிப்பழமறைகடணித்தனியேபாடிப்பாடி, யீங்குளதென்றாங்குளதென்றோடியோடியிளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந்தெட்டுந்தோறும், வாங்குபரவெளிமுழுதுநீண்டுநீண்டு மறைந்துமறைந்தொளிக்கின்றமணியேயெங்குந், தேங்குபரமானந்தவெள்ளமேசச்சி தானந்தவருட்சிவமேதேவதேவே,

எழுத்தறிந்து தமையுணர்ந்தயோகருள்ளத்தியலறிவாந்தருவினிலன்பெனுமோருச்சி, பழுத்தளிந்துமௌனரசமுஞ்சுவைமேற்பொங்கிப்பதம்பொருந்தவநுபவிக்கும் ப

மூமேமாயைக் கழுத்தரிந்துகருமமலத்தலையைவீசுங்கடுந்
தொழிலோர்தமக்கேநற்கருணைகாட்டி, விழுத்துணையாய
மர்ந்தருளும்பொருளேமோன வெளியினிறையானந்தவி
ளைவாந்தேவே. (௫௬)

உருத்திரர்நாரணர்பிரமர்விண்ணோர்வேந்தருறுகருட
ர்காந்தருவரியக்கர்பூதர், மருத்துவர்யோகியர்சித்தர்முனி
வர்மற்றை வானவர்கண்முதலோர்தம்மனத்தாற்றேடிக்,க
ருத்தழிந்துதனித்தனியேசென்றுவேதங்களைவினவமற்ற
வையுங்காணேமென்று, வருத்தமுற்றுங்கவரோடுபுலம்ப
நின்றவஞ்சவெளியேயின்பமயமாந்தேவே (௫௭)

பாயிரமாமறையனந்தமனந்தமின்னும் பார்த்தளந்து
காண்டுமெனப் பல்கான்மேவி, யாயிரமாயிரமுகங்களா
லும்பன்று ளளர்தளந்தோரனுந்துணையு மளவுகாணு
தேயிரங்கியழுதுசிவசிவவென்றேங்கித் திரும்பவருட்பர
வெளிவாழ்சிவமேயீன்ற, தாயிரங்கிவளர்ப்பதுபோ லெ
ம்போல்வாரைத் தண்ணருளால்வளர்க்கென்றுந் தாங்கு
ந்தேவே. (௫௮)

அந்தரமிங்கறிவோமற்றதனிலண்டமடுக்கடுக்காயமை
ந்தவுளவறிவோமாங்கே, யுந்துறும்பல்பிண்ட நிலையறி
வோஞ்சீவனுற்ற நிலையறிவோமற்றனைத்துநாட்டு, மெந்
தைநினதருள்விளையாட்டந்தோவந்தோ வெள்ளளவுமறி
ந்திலோ மென்னேயென்று, முந்தனந்தமறைகளெலாம்
... முழுமுழுமுதலேயன்பர்குறைமுடிக்குந்தேவே

தோன்றுபரசாக்கிரமுங்கண்டோமந்தச்சொப்பனமு
ங்கண்டோமேற்சுழுத்திகண்டோ, வான்றபரதுரியநிலை
கண்டோமப்பாலதுகண்டோமப்பாலாமதுவுங்கண்டோ
மேன்றவுபசாந்தநிலை கண்டோமப்பா லிருந்தநினைக்கா
ண்கிலோமென்னேயென்று, சான்றவுபனிடங்களெலாம்
வழுத்தநின்றதன்மயமேசின்மயமேசகசந்தேவே. (கூஉ)

பரிக்கிரகநிலைமுழுதுந்தொடர்ந்தோமேலைப்பரவிந்து
நிலையனைத்தும்பார்த்தோம்பாச, மெரிக்குமியற்பரநாத
நிலைக்கண்மெல்லவெய்தினோமப்பாலுமெட்டிப்போனோ
ம், தெரிக்கரியவெளிமூன்றுந் தெரிந்தோமெங்குஞ் சிவ
மேநின்சின்மயமோர்சிறிதுந்தேரேம், தரிக்கரிதென்றாக
மங்களெல்லாம்போற்றத் தனிநின்றபரம்பொருளேசாந்
தத்தேவே (கூச)

மணக்குமலர்த்தேனுண்டவண்டேபோலவளர்பரமான
ந்தமுண்டுமகிழ்ந்தோமெல்லா, மிணக்கமுறக்கலந்துகல
ந்நீதமாதற்கியற்கைநிலையாததுதா னெம்மாற்கூறுங், க
ணக்குவழக் கனைத்தினையுங்கடந்ததந்தோ காண்பரிதிங்
கெவர்க்குமெனக்கலைகளெல்லாம், பிணக்கறநின்றோலமி
டத்தனித்துநின்ற பெரும்பதமேமதாதீதப் பெரியதே
வே. (கூரு)

பொதுமென்றும்பொதுவினடம்புரியாநின்றபூரணசி
ற்சிவமென்றும்போதானந்த, மதுவென்றும் பிரமமென்

றும் பரமமென்றும் வகுக்கின்றோர்வகுத்திடுக வதுதா னென்று, மிதுவென்றுஞ்சுட்டவொண்ணுதகனுற்சும்மாவி ருப்பதுவேதுணிவெனக் கொண்டிருக்கின்றோமோ, வி துவென்றதண்ணளியாற்கலந்துகொண்டு விளங்குகின்ற பெருவெளியேவிமலத்தேவே. (௬௬)

அருமறையாகமங்கண் முதனூலீறெல்லா மமைந்த மைந்துமற்றவை க்குமப்பாலாகிக், கருமனைறந்துயிர்டொ றுங்கலந்துமேவிக்கலவாமற் பன்னெறியுங்கடந்துஞான த், திருமணிமன்றகத்தின்ப வுருவாயென்றுந் திகழ்கரு ணைநடம்புரியுஞ் சிவமேமோனப், பெருமலையேபரமவி ன்ப நிலையேமுக்கட்பெருமானே யெத்திறத்தும் பெரிய தேவே. (௬௭)

என்னுயிர்நீயென்னுயிர்க்கோருயிருநீயென்னின்னுயி க்குத்துணைவனீயென்னையீன்ற, வன்னைநீயென்னுடைய வப்பனீயென்னரும்பொருணீயென்னிதயந் தன்புநீயெ ன், னன்னெறிநீயெனக்குரியவுறவுநீயென்னற் குருநீயெ னைக்கலந்தநட்புநீயென், மன்னுடையவாழ்வுநீயென்னை க்காக்குந்தலைவனீகண்மூன்றுதழைத்ததேவே. (௬௮)

தானாகித்தானல்லதொன்றுமில்லாத் தன்மையனாயெ வ்வெவைக்குந்தலைவனாகி, வானாகிவெளியனலாய்நீருமாகி மலர்தலையவுலகாகிமற்றுமாகித், தேனாகித்தேனின்றுஞ்

றேன் செய்யும்பிழையை நோக்கி, * யிற்றவளைக்கேள்விடல்போல்விடுதியேல்யானென்செய்வே னெங்குறுவேனென் சொல்வேனே, (௮௧)

அடிமைசெயப் புகுந்திடுமெம்போல்வார்குற்றமாயிரம்பொறுத்தருளுமரசேநாயேன், கொடுமைசெயுமனத்தாலே வருந்தியந்தோகுரங்கின்கைமாலையெனக்குலையாநின்றேன், கடுமைசெயப்பிறர்துணிந்தா லடிமைதன்னைக் கண்டிருத்தலழகன்றேகருணைக்கெந்தாய், செயு மையுளப் பாதகனேனென்செய்வேனின்றிருவுளத்தை யறிந்திலேன்றிகைக்கின்றேனே, (௮௨)

கூடம்பாதமெய்ந்நெறியோருளத்தேயென்றுங்குறையாதவின்பளிக்குங் குருவேயாசைக், தாம்பாலேயாப்புண்டுவருந்தினாயேன் றையலார்மையலெனுஞ் சலதியாழ்ந்துவேம்பாமுவர்நீருண்டுயங்குகின்றே னுன்னடியார்களைமேலுவந்துநின்றே, றீம்பாலுஞ்சருக்கரையுந்தேனுநெய்யுந்தேக்குகின்றாரிதுதகுமோதேவதேவே, (௮௩)

வெள்ளமலர்ச்சடைக்கனியேமூவராகிவிரிந்தருளுமொருகனியேவிழலனேனைக், கள்ளமனக்குரங்காட்டுமாட்டமெல்லாங்கண்டிருந்துமிரங்கிலையேற்கவலையாலே,யுள்ள

---

* இற்றவள்-௭-தாமரையறுங்காப்போள்,

மெலிந்துழல்கின்றசிறியேன் பின்னருய்யும்வகையெவ் வகையீதுன்னுந்தோறும், பொள்ளெனமெய்வியர்க்கவுளம் பதைக்கச்சோபம் பொங்கிவழிகின்றதுநான்பொறுக்கிலேனே. (அச)

ஏனையறியாப்பருவத்தே யாண்டுகொண்ட வென்னாசேயென்குருவேயிறையேயின்று, மனையறியாப்பிழைகருதுமகிழ்நன்போல மதியறியேன்செய்பிழையை மனத்துட்கொண்டே, தனையறியாமுகத்தவர்போலிருந்தாயெந்தாய்தடங்கருணைப்பெருங்கடற்குத்தகுமோகண்டா, யனையறியாச்சிறுகுழவியாகியிங்கே யடிநாயேனாற்றுகின்றேனந்தோவந்தோ, (அரு)

தீவினைநல்வினை யெனும்வன்கயிற்றாலிந்தச் சீவர்களையாட்டுகின்றதேவோநாயே, னைவினைநேர்கண்மடவார்மையற்பேயாலிடருழந்துஞ்சலிப்பின்றியென்னேபின்னு, நாவினையென்பால்வருந்திக்கறண்டுகின்ற நாய்க்குநகைதோன்றநின்றுநயக்கின்றேனை, ஞ வினைவிட்டெருநுகறந் திம் வான்செல்லு மறிவிலிக்குமறிவிலியேனுனவாறே (அசா)

எம்பெருமானின்விளையாட் டென்சொல்கேனுனேது மறியாச்சிறியேனெனைத்தானிங்கே, செம்புனலாற்குழுத்தபுலாநசுவர்சூழ்பொத்தைச் சிறுவீட்டிலிருட்டறையிற்சிறைசெய்தந்தோ, கம்பமுறப்பசித்தழலுங் கொளு

ந்தவந்தக்கரணமுதற்பொறிபுலப்பேய்கவர்ந்துசூழ்ந்துவம்பியற்றக்காமாதியரட்டரெல்லாமடிபிடித்து வருத்தவென்றோவளர்த்தாயெந்தாய். (௮௭)

அம்பரத்தேயானந்த வடிவாலென்று மாடுகின்றமாமணியேயரசேநாயே, னிம்பரத்தமெனுமுலக நடையிலந்தோ விடருழந்தேன்பன்னெறியிலெனையிழுத்தே,பம்பரத்தினுடியலைப்படுத்துமிந்தப் பாவிமனமெனக்குலயப்படுவதில்லை, கொம்பற்றவிளங்கொடிபோற்றளர்ந்தேனென்னைக்குறிக்கொள்ளக்கருதுதியோகுறித்திலாயோ. (௮௮)

கண்ணுடையநுதற்கரும்பேமன்றிலாடுங்காரணகாரியங்கடந்தகடவுளேயின், றண்ணுடையமலரடிக்கோர்சிறிதுமன்பு சார்ந்தேனோசெம்மரம்போற்றணிந்தநெஞ்சேன், பெண்ணுடையமயலாலேசுழல்கின்றேனென் பேதைமையையென்புகல்வேன்பேயனேனைப், புண்ணுடையபுழுவிரும்பும்யுள்ளென்கேனோ புலைவிழைந்துவிலைவெறுத்தேன்புலையனேனே. (௮௯)

பொன்னுடையாரிடம்புகவோவவர்கட்கேற்கப் பொய்மொழிகள்புகன்றிடவோபொதிபோலிந்தக்,கொன்னுடையாவுடல்பருக்கப்பசிக்குச்சோறு கொடுக்கவோகுளிர்க்காடைகொளவோவஞ்ச. மின்னிடையார்முடைச்சிறுநீர்க்குழிக்கணந்தோ வீழ்ந்திடவோதாழ்ந்திளைத்துவிழிக்கவோதா, னென்னுடையாயென்னுடையாயென்னையிங்கேயெடுத்துவளர்த்தனையறியேனென்சொல்வேனே. (௯௰)

வருகணத்துவாழ்ந்திடுமோவிழுமோவிந்த மலக்கூடென்றறிஞரெலாம்வருந்தக்கேட்டு, மருகணைத்துக்கொளப்

பெண்பே யெங்கேகோட்டுக் கடைத்திடவெண்சோறெங்
கேயாடையெங்கே, யிருகணுக்குவியப்பெங்கேவசதியான
விடமெங்கேயென்றுதிரிந்திளைத்தேனல்லா, லொருகண
த்துமுனைநினைந்ததுண்டோவென்னையுடையானேயெங்
ணைகாணுய்யுமாறே. (௬௧)

பொன்மலையோசிறிதெனப்பேராசைபொங்கிப் புவிக
டையிற்பற்பலகாற்போந்துபோந்து நென்மலையோந்திம
லையோவென்றுதேடி நிலைகுலைந்துதன்றியுனை நினைந்துதே
டி,மன்மலையோமாமணியோமருந்தோவென்றுவுறுத்திய
தேயில்லையிந்தவஞ்சநெஞ்சாய், கன்மலையோவிரும்போசெ
ம்மரமோபாறைக்கருங்கல்லோ பாராய்முருட்டுக்கட்டை
யேயோ, (௬௨)

தம்மைமறந்தருளமுதமுண்டுதேக்குந் தகையுடையார்
திருக்கூட்டஞ்சார்ந்தாரேயன்: வெம்மைமெயலாந்தவிர்ந்து
மனங்குளிரக்கேள்வி விருந்தருந்திமெய்யறிவாம் வீட்டி
லென்றுஞ் செம்மையெலாந்தருமௌன வனைமேற்கொ
ண்டுசெறியிரவுபகலொன்றாந்தெரியாவண்ணம், மிம்மையி
லேயெம்மையிணங்காணச்சுத்த வின்பநிலையடைவே
னறியனே, (௬௩)

அடியனேன்பிழையனைத்தும்பொறுத்தாட்கொண்டவ
ருட்கடலேமன்றேந்துமரசேயிந்நாள், கொடியனேன்செ
ய்பிழையைத்திருவுள்ளத்தே கொள்ளுதியோகொண்டுரு
லங்குறிப்பதுண்டோ, கொடியனேமுதற்கடவுட் சமுகத்
தோர் தங்கொடும்பிழைகளாயிரமும் பொறுத்துமாயை

யொடியநேர்நின்றபெருங்கருணைவள்ளலெனமறைகளோ
துவ திங்குனைத்தானன்றே (௧௪)

கண்மயக்கும்பேரிருட்டுக்கங்குற்போதிற்கருத்தறியாச் சிறுவனையோர்கடுங்கானத்தே, யுண்மயக்கங்கொளவிடுத் தே யொருவன்பின்போ மொருதாய்போன் மாயையிரு ளோங்கும்போதின், மண்மயக்கம்பெறும்விடயக் காட்டி லந்தோமதியிலேன்மாழாந்து மயங்கிநொந்தான், வண்மையுற் றங்யதியின்பின்னென்னைவீட்டேமறந்தனையேபரமேநின்வ ன்மையென்னே. (௧௫)

நற்றாயும்பிழைகுறிக்கக்கண்டோமிந்நானிலத்தேமற் றவர்யார்நாடாரிவீணே, பற்றாயுமவர்தமைநாம் பற்றேம் பற்றிப்பற்றாதபற்றுடையார்பற்றியுள்ளே, யுற்றாயுஞ்சிவ பெருமான்கருணையொன்றே,யுறுபிழைகளைத்துணையும் பொறுப்பதென்றான், பொற்றாளைவிரும்பியதுமன்றுளா டும்பொருளேயென்பிழையனைத்தும்பொறுக்கவன்றே (

எண்ணியநம்மெண்ணமெலாமுடிப்பான்மன்றுளெம் பெருமானென்றுமகிழ்ந் திறுமாந்திங்கே, நண்ணியமற் றையர்தம்மையுறாமைபேசிநன்குமதியாதிருந்த நாயினே னைத், தண்ணியநல்லருட்கடலேமன்றிலென்பத் தாண்ட வஞ்செய்கின்ற பெருந்தகையேயெங்கள், புண்ணியனேபி ழைகுறித்துவிடுத்தியாயிற் பொய்யனேனெங்குற்றென்பு ரிவேனந்தோ, (௧௭)

அன்பர்திருவுளங்கோயிலாகக்கொண்டேயற்புதச்சிற்ச பையோங்குமரசேயிங்கு, வன்பரிடைச்சிறியேனைமயங்க

வைத்துமறைந்தனையேயானந்தவடிவோய்நின்னைத், துன்
பவடிவுடைப்பிறரிற்பிரித்துமேலோர் துரியவடிவினனெ
ன்றுசொன்னவெல்லா, மின்பவடிவடைந்தன்றேயெந்தா
யந்தோ மென்னளவென்சொல்கேளிவ்வேழையேனே. ()

புற்றேறுங்குமரவமெல்லாம்பணியாக்கொண்டு பொன்
மேனிதனிலணிந்தபொருளேமாயை யுற்றேறுங்குவஞ்சம
னக்கள்வனேனை யுளங்கொண்டுபணிகொள்வ துனக்கே
யொக்கு, மற்றேறுங்குமவரெல்லாம்பெருமைவேண்டும் வ
ன்மனத்தரெனைவேண்டார்வள்ளலேநான், கற்றேறுங்குமறி
வறியேன்பலவாச்சொல்லுங் கருத்தறியேனெனக்கருளக்
(௯௧
கருதுவாயே.

அருளுடையபரம்பொருளேமன்றிலாடு மானந்தப்பெ
ருவாழ்வேயன்பூளோர்தந், தெருளுடைய வுளமுழுதாட்
கோயில்கொண்ட சிவமேமெய்யறிவுருவாந்தெய்வமேயி
மருளுடையமனப்பேதைநாயினேன்செய்வன் பிழைபை
ச்சிறிதேனுமதித்தியாயி, லிருளுடையபவக்கடல்விட்டே
றேனென்னை யேற்றுவதற் கெண்ணுகவென் னின்ப
(௯
தேவே,

திருச்சிற்றம்பலம்.

மகாதேவமாலை-முற்றிற்று.